# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2366/13 - 2024 ජනවාරි මස 09 වැනි අඟහරුවාදා - 2024.01.09

*2366/13 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பி. 3/2021* (III)

***2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்***

*53 ஆம் பிரிவின்கீழான கட்டளை*

*2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் விதப்புரைகளைக் கருத்திற்கொண்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மேலும்-*

(அ) அமைச்சரவை, 2024, சனவரி 1 ஆந் திகதிய 23/2530/631/033 ஆம் இலக்க அதன் முடிபின் மூலம் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் வியாபாரத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமொன்றாகக் குறித்தலை அங்கீகரித்துள்ளது எனவும்;

(ஆ) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமொன்றாக அத்தகைய வியாபாரத்தை கருதுகின்றமைக்கான நியாயமான தன்மை இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவுள்ளது எனவும்;

(இ) சட்டவாக்கங்களின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள் இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும் எனவும்; அத்துடன்

(ஈ) குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள் இதற்கான அட்டவணை IV இல்குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் தொடங்குதலும் நடைமுறையில் இல்லாதொழிதலும் வேண்டும் எனவும்,

இக்கட்டளை மூலம் குறித்துரைக்கின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு,
2024, சனவரி 08.

**அட்டவணை I**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமொன்றாக குறிக்கப்பட்ட வியாபாரம் பற்றியவிபரங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயர் | ஆசிறி போர்ட் சிடி ஹொஸ்பிடல் பிறைவேட் லிமிட்டெட் |
| 2. | உரிம இல. | 2308230015 |
| 3. | கரைகடந்த கம்பனி பதிவில. | பீசீசீ 00284133 |
| 4. | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரத்தின் வகுப்பாக்கம் | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதனிலை வியாபாரம் |
| 5. | விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகளுக்கான உரித்துடைமை | ஆசிறி போர்ட் சிடி ஹொஸ்பிடல் பிறைவேட் லிமிட்டெட் ஆனது, செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதனிலை வியாபாரம் ஒன்றாக மட்டுமே குறிக்கப்படுகின்றதுடன் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரம் ஒன்றாக குறிக்கப்படுவதற்கு தகவுடையதாகவில்லை |
| 6. | தகவுடைமைக் கட்டளைகள் | 2023, ஓகத்து, 4 ஆந் திகதிய 2343/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்குவதன்மீதான வழிகாட்டுநெறிகள்) பற்றிய ஒழுங்குவிதிகளின் 2 (ஆ) என்னும் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள் |
| 7. | ஏற்புடையற்பாலதான விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்புத் திட்டம் | 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்குவதன்மீதான வழிகாட்டுநெறிகள்) பற்றிய ஒழுங்குவிதிகளின் 3 (1) (அ) என்னும் ஒழுங்கு விதியில் குறித்துரைக்கப்பட்ட திட்டம் |

**அட்டவணை II**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமாக கருதுவதற்கான நியாயமான தன்மை**

*2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் விதிக்கப்பட்டவாறு, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்கள், சொல்லப்பட்ட சட்டத்தின் 53 (5) ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்ற நலனைக் கருத்திற்கொண்டு, கொழும்புத் துறைமுக நகரத்தை தாபிக்கின்றமையின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கென, செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமொன்றாக வியாபாரத்தை குறிப்பதில் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.*

*முன்னணி சுகாதாரக் கவனிப்புச் சேவை வழங்குநராகவுள்ள ஆசிறி ஹொஸ்பிடல் ஹோல்டிங்ஸ் பீஎல்சீ ஆனது, 780 படுக்கைகளுக்குமேற்பட்ட கொள்ளளவுடன் இலங்கையில் தற்போது 6 வைத்தியசாலைகளைக் கொண்டுள்ளது. ஆசிறி ஹொஸ்பிடல் ஹோல்டிங்ஸ் பீஎல்சீ ஆனது 100 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடொன்றுடன் கொழும்பு துறைமுக நகர வைத்தியசாலை கருத்திட்டத்தின் அபிவிருத்திக்காக ஐக்கிய அமெரிக்காவின் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான மயோ மன்றத்துடன் பங்காளராக இருக்கும்.*

*ஆசிறி துறைமுக நகர வைத்தியசாலையில் நிர்மாணம், நான்காம் ஆண்டிலிருந்து தொழிற்பாடுகள் தொடங்கும் என எதிர்பார்த்துக்கொண்டு மூன்று ஆண்டுகளினுள் நிறைவுசெய்யப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்படுகின்றது. ஆசிறி துறைமுக நகர வைத்தியசாலையில் ஏறத்தாழ 700 ஆளணியினருக்கான தொழில்வாய்ப்பை உருவாக்குவதானது குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் வருமான ஈட்டுகைக்கான வாய்ப்புக்களை விளைவிக்கும்.*

*ஆசிறி துறைமுக நகர வைத்தியசாலையானது, 500 படுக்கைகளையும் உறுப்புமாற்று அறுவைசிகிச்சை, அழகியல் அறுவை சிகிச்சை, விளையாட்டு மருத்துவம் மற்றும் முன்னேற்றமடைந்த புற்றுநோய் சிகிச்சை நிலையம் போன்ற புதிய சிகிச்சைகள் மற்றும் அறுவை மருத்துவ நடவடிக்கைமுறைகளையும் கொண்ட இற்றைநிலை மருத்துவ வசதியை உருவாக்கும். ஆசிறி துறைமுக நகர வைத்தியசாலையானது, கொழும்பை தென்கிழக்காசியாவில் ஒரு மருத்துவ சுற்றுலா மையமாக மாற்றி பூகோள ரீதியிலான மிகச்சிறந்த மருத்துவ செயன்முறைகளைக் கடைபிடித்து உள்நாட்டு மருத்துவர்கள் பயிற்றுவிக்கப்படுவதற்கும் வெளிநாட்டு மருத்துவ விசேட நிபுணர்களுடன் வேலைசெய்வதற்குமான தளத்தை உருவாக்குவதற்கு உட்கருதுகின்றது.*

| அட்டவணை III<br>சட்டவாக்கங்களின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள் | |
|---|---|
| **சட்டத்தின் அட்டவணை II இன்கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள்** | **வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள்** |
| 1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் | (அ) பகிர்ந்தளிக்கப்பட்ட எல்லா வருமானங்களும், இலாபங்களும் மற்றும் பங்கிலாபங்களும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக் கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்;<br>(ஆ) செலுத்தப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும் முதல் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக் கப்பட்ட பிடித்துவைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்;<br>(இ) மேற்சொல்லப்பட்ட இருபத்தைந்து ஆண்டு காலப்பகுதியின் முடிவின் பின்னர், இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏலவேயுள்ள கூட்டிணைப்பு வரி வீதத்திலிருந்து 50% ஊக்குவிப்பு பத்து ஆண்டு காலப்பகுதியொன்றிற்கு வழங்கப்படுதல் வேண்டும். |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளும் உள்நாட்டு கொள்வனவுகளும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட வரிகளிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் உள்நாட்டு கொள்வனவுகளும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 6. (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக் கப்படுதல் வேண்டும். |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 11. (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம் | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |

**அட்டவணை III**

**சட்டவாக்கங்களின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள்**

| சட்டத்தின் அட்டவணை II இன்கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள் | வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள் |
|---|---|
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் | 2022, யூன் 3 ஆந் திகதிய 2282/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (கொழும்பு துறைமுக நகரில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் தவிர்ந்த இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |

**அட்டவணை IV**

**வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகளின் செல்லுபடியாகும்காலப்பகு**

| சட்டத்தின் அட்டவணை II இன்கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள் | தொடங்கும் தேதி | முடிவுறும் தேதி |
|---|---|---|
| 1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2059, சனவரி 31 |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 6. (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 11. (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச்சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

EOG 01-0078

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.